# உதயன்

விலை
ரூபா
4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ௵ 2022 ஆனி மீ 30 உ ஞாயிற்றுக்கிழமை (14-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 22


பிந்திய அதிகாலைச் செய்தி

# மிக முக்கிய இராணுவத் தளம்

# ஆனையிறவில் புலிகள் வசம்!

## அதிகாலை வெற்றிக்கொடி

யாழ்ப்பாணம், ஜூலை 14

நேற்று இரவு 8 மணி முதல் விடுதலைப் புலிகள் தொடுத்த அதிரடித் தாக்குதலில் ஆனையிறவு இராணுவ முகாமின் மற்றொரு பிரதான தளம் விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் இருந்தது.

இன்று அதிகாலை இரண்டு மணிக்குக் கிடைத்த தகவல்களின்படி ஆனையிறவில் மேலும் ஒரு வெற்றிச் சாதனையைப் புலிகள் போராளிகள் எட்டிக் கொண்டிருந்தனர்.

உப்பள உல்லாச விடுதி முகாம் சடந்த புதனிரவு விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்த பின்னர், அதிலிருந்து சுமார் 250 யார் தூரத்தில் உள்ள உப்பள பிரதான அலுவலக முகாம் மீது நேற்று இரவு 8 மணியளவில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்தனர்.

பெருத்த அளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் உப்பள பிரதான அலுவலக முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியுறும் நிலையில் இருந்ததாக அதிகாலை 2 மணிக்கு உதயன் பணிமனைக்குச் செய்திகள் கிடைத்தன.

இந்த முகாமின் பல காவல் அரண்கள் சின்னாபின்னமடைந்திருப்பதாகவும்—

புலிகள் அணி முகாமிற்குள் புகுந்து முகாமைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நிலையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

விமானங்கள், பொம்மர்கள், ஹெலிகள் ஆகியவற்றின் பலத்த குண்டு வீச்சுக்கு மத்தியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரியவந்தது.

இந்தத் தாக்குதலில் இராணுவத்தரப்பில் பலர் உயிரிழந்திருப்பதாகவும்—

உயிரிழந்த சிப்பாய்களின் சடலங்கள் புலிகள் வசம் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் முகாம் பகுதியில் கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முகாமைக் கைப்பற்றும் இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் சில போராளிகள் வீரமரணமடைந்ததாகவும் தெரியவந்தது.

இந்த பிரதான தளம் வீழ்ந்ததைத் தொடர்ந்து ஆனையிறவு முகாமின் ஏனைய தளங்கள் விடுதலைப் புலிகள் வசம் மிக எளிதில் வீழ்ந்து விடும் என்றும்—

புலிகளின் முழு வெற்றிக்கு இது வழிவகுக்கும் என்றும் இன்று அதிகாலை நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

## இரத்த தானம் செய்ய மக்கள் முண்டியடிப்பு

யாழ் போதனா ஆஸ்பத்திரியின் இரத்த வங்கிக்கு இரத்ததானம் வழங்க நேற்றும் பல பொதுமக்கள் முன் வந்து முண்டியடித்து நின்றனர்.

வடமராட்சிப் பகுதியிலிருந்தும் நேற்று மக்கள் இரத்த தானம் வழங்க ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தனர்.

ஆஸ்பத்திரி இரத்த வங்கியின் வசதிக்கேற்ப முன்வந்த பொதுமக்களில் ஒரு பகுதியினரின் இரத்தம் சேகரிக்கப்பட்டது. ஏனையோர் தமது பெயர், விலாசங்களை வங்கியில் பதிந்து சென்றனர். [உ-15]

## முற்றுகை அல்ல; இது பெரும் போர்!

யாழ்ப்பாணம், ஜூலை 14

'ஆனையிறவு முகாம் மீதான தாக்குதல் வெறும் முகாம் தகர்க்கும் முற்றுகை அல்ல; இது இரு நாடுகளுக்கு இடையிலான பெரும் போர்'.

— இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் தளபதிகளுள் ஒருவர்.

ஓர் எல்லைப் பிரதேசத்தில் ஒரு பெரும் இராணுவத்துடன் தமிழீழ இராணுவப் படை மோதிக் கொண்டிருக்கிறது. வான், தரை வழியாக பெரும் படையுடன் நேரடியாக யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது கடல் வழிச் சண்டை எந்நேரமும் நடக்கலாம். எத்தகைய தாக்குதலையும் முறியடிக்க தயாராக இருக்கிறோம்.

முன்னர் எப்போதும் இல்லாதவாறு மிகவும் திட்டமிட்டு பெரும் எண்ணிக்கையான வீரர்களுடன் — இந்த யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

வெட்டவெளிப் பிரதேசத்தில் — மரபு ரீதியான யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது.

நாட்டுக்கு நாடு யுத்தம் நடக்கும் போது மக்களின் தேசபக்தி எழுச்சி பொங்கி எழுவது போல, தமிழீழ மக்கள் எழுச்சி கொள்ள வேண்டிய வேளை இது!

— இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார். [உ]

## விமான எதிர்ப்பு தாக்குதல் தீவிரம்!

யாழ்ப்பாணம் ஜூலை 14

ஆனையிறவு முகாம் பகுதியில் ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள், பொம்மர்கள் மற்றும் ஹெலிகளுக்கு எதிராக விடுதலைப் புலிகளின் தாக்குதல் தீவிரமாக இருப்பதாக யுத்தமுனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகளின் தாக்குதலினால் விமானங்கள் மற்றும் ஹெலிகள் 5 ஆயிரம் அடிக்கு கீழே இறங்க முடியாத நிலையில் இருப்பதாகவும்–

உயரத்தில் இருந்தவாறே அவை இலக்கின்றி குண்டுகளை வீச வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விமானத் தாக்குதல்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## போட்டி போட்டுக் கொண்டு உதவி வழங்கும் மக்கள்

ஆனையிறவில் மண்மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் போராளிகளுக்கு தம்மாலான உதவிகளை அளிக்க தமிழீழ மக்கள் போட்டி போட்டுக்கொண்டு முன் வருகிறார்கள்.

போராடிக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு இளநீர், உலர் உணவுப் பொருள்கள் போன்றவற்றை மக்கள் தாராளமாக வழங்கி வருகிறார்கள்.

அத்துடன் விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட வேண்டுகோளைத் தொடர்ந்து காயப்பட்ட போராளிகளுக்கென படுக்கை விரிப்புகள், தலையணிகள் போன்றவற்றையும் அவர்கள் வழங்கி வருகின்றனர்.

குடாநாடு முழுவதும் முன் எப்போதும் இல்லாதவாறு போர்க்கால எழுச்சி ஒன்று ஏற்பட்டிருக்கிறது.

அத்துடன் காயப்பட்ட போராளிகளுக்காக இரத்த தானம்செய்வதிலும் மக்கள் பெரும் ஆர்வம்காட்டி வருகிறார்கள். [இ-த]

## பயணிகள் வந்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 14

சங்குப்பிட்டி — கேரதீவு ஊடாக நேற்று சில நூற்றுக் கணக்கான பயணிகள் யாழ். நகரை வந்தடைந்தனர்.

## முச்சந்தி முரளி



அம்மா...... நல்லா அரண்டு போய் இருக்கா போலை...!

## 60 வேங்கைகள் களப்பலி!

ஆனையிறவு முகாம் பகுதியில் கடந்த நான்கு தினங்களாக இடம்பெற்று வரும் மோதலில் விடுதலை வேங்கைகள் 60 பேர் வரை களப்பலியானதாகத் தெரியவருகிறது.

முதல் நாள் உப்பள உல்லாச விடுதி முகாமை வீழ்த்தும் தாக்குதலில் மட்டும் 25 போராளிகள் களப்பலியானார்கள் என்பது தெரிந்ததே. (உ)

## ஷெல்லுக்குப் பயந்து ஓடிய மாது குளத்திற்குப் பலி!

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் ஊர்காவற்றுறை இராணுவத்தினர் நடத்திய ஷெல், பீரங்கித் தாக்குதல்களின்போது, பயந்து ஓடிய வயோதிப மாது தவறுதலாக குளத்துக்குள் விழுந்து மரணமானார்.

வேலணை முதலாம்வட்டாரத்தைச் சேர்ந்த இரத்தினசபாபதி செல்லம்மா (67 வயது) என்பவரே இறந்தவர் ஆவார்.

அன்றிரவு நூற்றுக்கு மேற்பட்ட ஷெல் பீரங்கிக் குண்டுகள் வேலணை, புளியங்கூடல், சரவணை, பள்ளம்புலம் ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன. இதனால் வீடுகள் பல சேதமடைந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

அதே இரவு பலாலியில் இருந்தும் இரு தடவைகள் வேலணைப் பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல்கள் ஏவிவிடப்பட்டன. (ஒ-125)

## தன்னைக் கொல்ல முயற்சி என்கிறார் ஜெயலலிதா!

சென்னை, ஜூலை 14

என்னைக் கொல்வதற்கு ஏதோ ஒரு வகையில் முயற்சி செய்யப்பட்டுவருகிறது.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று சட்டசபையில் முன்கண்டவாறு சொன்னார்.

''எனது அரசு எத்தகைய மிரட்டலுக்கோ, பயமுறுத்தலுக்கோ பணியாது. எத்தகைய சோதனைகள் வந்தாலும் அவற்றைச் சந்திக்கத் தயாராக இருக்கின்றேன்''— என்றும் அவர் சொன்னார். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜீவ் கொலை சந்தேகநபர்

# சிவராஜன் பற்றி துப்பு துலங்காமல் போகலாம்

சென்னை, ஜூலை 14
ராஜீவ் கொலையில் முக்கியமானவரராகக் கருதப்படும் ஒற்றைக்கண் சிவராஜன் பற்றிய துப்புத்துலங்காமலே போகலாம்.

இப்படி ''இந்தியா ருடே'' பத்திரிகை ஹேஸ்யம் தெரிவித்துள்ளது.

குண்டு வெடிப்பு நடந்த முதல் 48 மணி நேரக் குழப்பத்தைப் பயன்படுத்தி அவர் யாழ்ப்பாணம் சென்றிருக்கலாம் என்றும்—

புலிகளின் பிளாஸ்ரிக் படகுகள் இரண்டு மணி நேரத்திற்குள் அவரை யாழ்ப்பாணம் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கலாம் என்றும்.

அது மேலும் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை ஆராய யாழ்ப்பாணம் செல்ல புலனாய்வுக் குழுவின் தலைவர் ஐ. ஜி. கார்த்திகேயன், இலங்கை அதிகாரிகளிடம் அனுமதி கேட்டார் என்றும் ஆனால் அனுமதி மறுக்கப்பட்டதாகவும் ''இந்தியா ருடே'' தெரிவிக்கிறது.

[த]

## கலந்துரையாடல்

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களையும் யாழ் வைத்தியசாலையில் சிரமதானப் பணியில் ஈடுபடுவதற்காக ''பாலம்'' பணிமனையில் இன்று கலை 9 மணிக்கு கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

[ஓ]

## பூாஷாண உத்தியாபன அழைப்பு

### ஸ்ரீலஸ்ரீ வேதையாக்குருக்கள் தியாகராஜாக்குருக்கள்

உதயம்: 1 – 7 – 1941
அஸ்தமனம்: 6 – 7 – 1991

நிகழும் பிரசோற்பத்தி வருடம் ஆனி மாதம் 31 ஆம் திகதி (15-7-1991) திங்கள் காலை 8 மணியளவில் தமிழ்நாடு வேதாரணியத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கரவெட்டி நுணுவில் பிள்ளையார் கோவில் பிரதம குருவுமான ஸ்ரீலஸ்ரீ வேதையாக்குருக்கள் – தியாகராஜக் குருக்கள் அவர்களின் நீர்க்கடன் முதலிய கிரியைகள் நடை பெற்று ஷ்ரீ கோயிலின் தீர்த்தக்குளத்தில் சேர்க்கப்படும். அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஆலய நிர்வாகம்.
[17516]

## முக்கிய அறிவித்தல்

நீராவியடி வண். வட கிழக்கு சனசமூக நிலைய நிதி உதவிக்காக இன்று 14 - 07 - 1991 இல் நடைபெறவிருந்த நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

[17519] —நிர்வாகம்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 22 — 03 — 1905



மறைவு: 06 — 07 — 1989

### அமரர் கனகரத்தினம் சிவசம்பு

(முன்னாள் பிரதம பாதுகாவலர் புகையிரதப் பகுதி; சமாதான நீதிவான்]

பாசத்தின் பிறப்பிடமாய், அன்பின் இருப்பிடமாய் நீண்ட காலம் நிறைவாழ்வு வாழ்ந்து எம்மை எல்லாம் ஆளாக்கிய அன்புத் தந்தையே! அன்புத் தாத்தாவே! உங்களை எங்கள் மனக்கோயிலில் வைத்து வழிபடுகின்றோம்.

தங்கள் நினைவு தினமாகிய இன்று 14-07-1991 ஞாயிற்றுக்கிழமை தங்களது ஆன்ம சாந்தியின் பொருட்டு இறைவன் திருவடிகளைப் பிரார்த்தனை செய்கின்றோம்.

திருமதி சிவஈஸ்வரி குலேந்திரா,
(மகள்)
செல்வன் குலேந்திரா சிவேந்திரா.
(பேரன்)

''ஈஸ்வரி வாசம்''
நந்தாவில் அம்மன் வீதி,
கொக்குவில். (17388)

## 51ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

வீர ஜனனம்: 1971 — 03 — 10



வீர மரணம்: 1991 — 05 — 26

### கப்டன் றமேஸ்
### [தர்மலிங்கம் இறஞ்சன்]

எம் எண்ணச் சிறைதனில்
சின்னக் குயிலென வளர்ந்த எம் செல்வமே;
அஞ்சிடாது துஞ்சிடாது அடிபணியாது
பஞ்சுபோன்ற உன் கரங்கள்
பாரத் துப்பாக்கியதைத் தூக்கியதே!
அஞ்சி வாழும் எம் இனத்தின்
விடிவே முடிவென
கட்டுவன் காவலரண் தன்னில்
காத்திருந்த வேளையிலே
புடங் கொண்ட புலிகளுக்கு
புறமுதுகில்லையென நெற்றிக்
கண்முன்னே குண்டேந்தி
மண் மாதாவின் முத்தமதைப் பெற்றாயோ!

15 – 7 – 91 நாளை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் உற்றார், உறவினர், நண்பர்களைக் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

பெற்றோர், சகோதரிகள், அத்தான், பேரன், பேத்தி.

தவம் வீதி,
அச்சுவேலி. [17503]


# பற்றீஸியன் தொழிற்பயிற்சி நிறுவனம்

# PATRICIAN INSTITUTES

## தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

1. Computer Processing Courses
   [1] Computer Programming in BASIC Language and disk Operating system (M. S, DOS)
   Duration — 4 Months
   [2] Word Processing and M. S. DOS (Word Star 4000)
   Duration — 3 Months
   [3] அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க சனி, ஞாயிறு வகுப்புகள் - ஆரம்பிக்கப்படுகின்றன.

ஆரம்பம்: 20 — 07 — 1991 சனிக்கிழமை காலை 9-00 மணி

2. City and Guilds of London Institute
   Quantity Surveying (Part - I) (6 Months)
   Commence: 18 — 07 — 1991 4.00 p. m.

பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 17 — 07 — 1991 புதன்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்.

3. Short - Hand and Typing (English) — தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும்
4. Electrical Wiring — மின்சார இணைப்பு (3 மாதம்)
5. Motor Mechanism — மோட்டார் வாகனம் - திருத்துதல் (6 மாதம்)
6. Motor Winding — மோட்டார் வைன்டிங் (4 மாதம்)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெறுபவர்களின் நலன் கருதி பின்வரும் புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

7. Plumbing — நீர்குழாய் இணைப்பு (3 மாதம்)
8. General Electrician — ஜெனரல் எலக்ரீஸியன் (4 மாதம்)

இம் பயிற்சி நெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்கள்.

(i) அடிப்படை மின்சாரம் [AC/DC] — BASIC Electricity [AC/DC]
(ii) மோட்டர் வைன்டிங் — Motor Winding
(iii) ஆமச்சர் வைன்டிங் — Armature Winding
(iv) டிரான்ஸ் போமர் வைன்டிங் — Transformer Winding
(v) ஹவுஸ் வயறிங் — House Wiring
(vi) எல்லா விதமான மின் உபகரணங்களும் பழுது பார்த்தல், இயக்குதல் — Repairing of all type of Electrical Equipments

9. Special English Classes — விசேட ஆங்கில பயிற்சி நெறி

இலக்கணத்துடன் க. பொ. த. [சா. த.] மற்றும் சகல பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையிலும் நன்றாக எழுத, பேச வாசிக்க மிகக் குறுகிய காலத்தினுள் பயிற்சி பெறுவதற்கு வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

● விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

பதிவாளர்
பற்றீஸியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
59, சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

Registrar,
Patrician Institutes of Higher Studies
59, St. Patrick's Road, Jaffna.

[சி/0251]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உதவிக்கரம் கொடுங்கள்!

ஆனையிறவில் போர் தொடங்கி நான்கு நாட்கள் நேற்றுடன் முடிந்து விட்டன. இன்று ஐந்தாவது நாள்.

கடந்த பதினான்கு மாதங்களாக தமிழ் மண்ணில் நடந்து வரும் யுத்தத்தில் ஆனையிறவுப் போர் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதில் தமிழர் பக்கம் கிடைக்கும் வெற்றி பல மாற்றங்கள், திருப்பங்கள், முக்கிய நிகழ்வுகளுக்கு வழிகோல வல்லது. தமிழர் உரிமைப் போராட்டத்தில் ஒரு மிகப் பெரும் திருப்புமுனையாகவும் அது தடம்பதிக்கும் எனலாம்.

கரந்தடிப் படையாக இருந்த விடுதலைப் புலிகள் இப்போது ஒரு மரபு வழி இராணுவத்துக்கு நிகராக, அதனை விடவும், பலம் வாய்ந்ததாகவும் மாறி களம் பல கண்டு, வெற்றிகளையும், சாதனைகளையும் நிலை நாட்டி உள்ளது.

எனினும் ஒரு நாட்டு அரசாங்கத்தின் படைகளுக்கு உள்ள வசதிகளும், வாய்ப்புகளும் அவர்களுக்கு இல்லை. உரிமை வேண்டி நிற்கும் தமிழ் மக்கள் தரும் ஆதரவிலும், ஒத்துழைப்பிலும்தான் போரளிகளின் முழுப் பலமும் தங்கி இருக்கிறது.

ஆனையிறவில் தற்போது நடைபெறும் மோதல் இதுவரை நடைபெற்ற சண்டைகளில் மிகவும் கடுமையானதாகும் என்று பாதுகாப்பு அமைச்சின் துணைச் செயலாளர் கூறியிருக்கிறார். ஆளணி, அம்பு, படைபலம், பணபலம் அதிகம் உள்ள அரசுக்கே அந்த நிலை என்றால்...

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையிலும் ஆனையிறவுப் போர் மிகப்பெரிய யுத்தம் என்றே கூறவேண்டும். ஐந்து மினி முகாம்களைக் கொண்ட, ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உள்ள, நவீன ஆயுத வசதிகள் உள்ள ஆனையிறவைக் கைப்பற்றுவதற்கு முனைப்பு மிகுந்த உழைப்புத் தேவை. அவர்களிடம் இருக்கும் வல்லமை நலிந்து போகாமலும், மன உறுதி தளர்ந்து போகாமலும், அவர்கள் களத்தில் வெற்றிக்கொடி நாட்டிட தமது ஆதரவினாலும், உதவிகளினாலும் தட்டிக் கொடுக்க வேண்டியது மக்கள் கடமையாகும்.

களத்தில் வீர நெஞ்சுடனும், தீர மனதுடனும் போராடும் போராளி ஒவ்வொருவரும் தனது மகன் என்றும் மகள் என்றும் எண்ணிப் பெற்றோர்கள் தங்களால் ஆன உதவிகளைச் செய்ய வேண்டும்.

இள வயதினரும் முதலுதவி, உலர் உணவு சேகரித்துக் கொடுத்தல் ஆகிய பணிகளைச் செய்து போராளிகளுக்கு ஊக்கத்தையும். உற்சாகத்தையும், புத்துணர்ச்சியையும் ஊட்ட வேண்டும். அவர்களுக்கு எல்லா வகைகளாலும் ஆதரவுக்கரம் கொடுக்க வேண்டும்.

அரசாங்கத்துக்குப் பெரும் சவாலாக், பேரிடியாக போராளிகள் ஆனையிறவுக் களத்தில் கடும் சமர் நடத்திக் கொண்டிருக்கும் வேளை, குடாநாட்டில் களியாட்டங்களும், விழாக்களும் தவிர்க்கப்பட வேண்டும். அவர்களுக்கு உதவுவது சம்பந்தமான கலந்துரையாடல்கள், தவிர ஏனையவை யாவும் ஒத்திவைக்கப்பட வேண்டும்.

மக்கள் மனங்களில் போர்க் காலத்துக்குரிய எழுச்சியும், போராளிகளுக்கு உறுதுணையாக நிற்கும் மனோநிலையும் உருவாக வேண்டும். அவை இன்று ஞாயிறு தொடங்கும் இந்த வாரத்தின் உடனடித் தேவைகள்.

## கண்ணிவெடி வைப்பதில் புலிகளின் அசாத்தியத்திறன்

### 'இந்தியா ருடே' தகவல்

சென்னை, ஜூலை 14

விடுதலைப்புலிகள் கண்ணிவெடி, மற்றும் வெடி மருந்துகளில் மிகத் திறமையானவர்கள். நீங்கள் மோதும் ஒவ்வொரு தமிழனும் விஞ்ஞானத்தில் நிபுணன்.

1987 இல் இலங்கை வந்திருந்த இந்திய அமைதிப்படை மேஜர் ஒருவர் அப்போது இலங்கை இராணுவ கேர்ணல் ஒருவரினால் மேற்கண்டவாறு எச்சரிக்கப்பட்டாராம்.

இப்படி ''இந்தியா ருடே'' செய்தி வெளியிட்டுள்ளது.

இதனை முதலில் நம்ப மறுத்துவிட்டாராம் இந்திய மேஜர். ஆனால் இந்த சந்திப்பு நிகழ்ந்து ஒரு வாரத்தில் மூன்று இந்திய வாகனங்களைப் புலிகள் தகர்த்தெறிந்தனராம். இதன் பின்பு மேலும் ஆலோசனை கேட்க அந்த இலங்கை கேர்ணலுக்கு இந்திய மேஜர் ஆள் அனுப்பினாராம்.

வெடிமருந்துகளைப் பயன்படுத்துவதில் விடுதலைப் புலிகள் மிகவும் திறமையானவர்கள் என்பது அமைதிப்படையின் கண்டுபிடிப்பு என்றும் —

தென்னை மரங்களைக் குடைந்து கூட கண்ணிவெடிகளை அவர்கள் வைத்து விடுவார்கள் என்றும் —

டி. 72 டாங்கிகளில் உள்ள 15 தொன் சுழல் மேடையைக் கூட அது தூக்கி எறியும் என்றும் — ''இந்தியா ருடே'' செய்திவெளியிட்டுள்ளது. [த]

## ஈழத் தமிழர் பதிவு செய்ய கால அவகாசம் நீடிப்பு

தமிழகத்திள அகதிமுகாம்களுக்கு வெளியே வசிக்கும் இலங்கைத் தமிழர்கள் மற்றும் அவர்களுக்கு தொழில் வழங்கியோர், வீடுகளை வாடகைக்கு விட்டவர்கள் ஆகியோர் தங்கள் விவரங்களை பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்துகொள்ள வழங்கப்பட்ட காலக்கெடு எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதுவே கடைசி நீடிப்பு என்றும் காலக்கெடுவினுள் பதிவுசெய்யத் தவறும் இலங்கைத் தமிழர்கள், அவர்கள் பற்றிய விவரங்களைக் கொடுக்கத் தவறியோர் ஆகியோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாநில அரசு அறிவித்துள்ளது. (இ,எ)

### உரிமையாளர் இன்றி

## பூட்டி நிற்கும் கார்களின் கதவு உடைத்து சோதனை!

கொழும்பு, ஜூலை 14

கொழும்பு மாநகரில் உரிமை கோரப்படாத நிலையில் காணப்பட்ட ஐந்து மோர்ட்டார் வாகனங்களின் கதவுகள் பொலீஸாரினால் பலவந்தமாகத் திறக்கப்பட்டன.

போக்குவரத்து பொலீஸ் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி தெரிவித்தது.

கூட்டுப்படைத் தலைமை அலுவலகத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பு நகரில் வாகனங்கள் மீதான சோதனைகளை பொலீஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

அதன் ஒரு கட்டமாக வீதி ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த, குறிப்பிட்ட வாகனங்களின் உரிமையாளர்களைத் தேடிக்கண்டுபிடிக்க முடியாத நிலையில் பொலீஸார் அவற்றின் கதவை உடைத்துத் திறந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## குண்டு வெடித்ததும் ஓடிய 12பொலீஸார் வேலைநீக்கம்

சென்னை, ஜூலை 14

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட தினம் ஸ்ரீபெரும்புதூரில் கூட்டம் நடைபெறவிருந்த இடத்தில் இருந்து ஓடிவிட்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் உட்பட 12 பொலீஸார் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

குண்டு வெடித்ததைத் தொடர்ந்து அந்த இடத்தில் இருந்து இவர்கள் தப்பி ஓடினார்கள் என்று தெரிவிக்கப் பட்டது. (உ-எ)

## உத்தரப் பிரதேசத்திலும் சீக்கியத் தீவிரவாதிகள்

### நேற்று 10 பேர் சுட்டுக்கொலை

லக்னோ, ஜூலை 14

உத்தரப்பிரதேச மாநிலத்தில் வைத்து பத்து சீக்கியத் தீவிரவாதிகளை பொலீஸார் நேற்றுச் சுட்டுக் கொன்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

பஞ்சாப் மாநிலத்திற்கு வெளியே இன்னொரு மாநிலத்தில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் சீக்கியத் தீவிரவாதிகளை பொலீஸார் கொன்றது இதுவே முதற் தடவை என்று சொல்லப்பட்டது. (உ-எ)

## சதாம் மீண்டும் பிடிவாதம்; புஷ் காலக்கெடு விதிப்பு!

பக்தாத், ஜூலை 14

தமது நாட்டிலுள்ள அணு ஆயுத நிலையங்களை சாவதேச பரிசோதனைக்குத் திறந்து விட ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் மறுத்து விட்டார்.

ஈராக் தனது அணு ஆயுத நிலையங்களை [illegible] செய்ய அனுமதி மறுப்பின், அந்நிலையங்கள் மீது அமெரிக்கா தலைமையிலான நேசப்படைகள் விமானத் தாக்குதலை நடத்தும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பது தெரிந்ததே.

திரு. புஷ் இது தொடர்பாக விதித்துள்ள காலக்கெடு [illegible] உடன் முடிவடைகிறது. (உ-எ)

## பாஸ்போர்ட் விண்ணப்பம்: புதிய நடைமுறை அறிமுகம்

நவாலி, ஜூலை 12

பாஸ்போர்ட் பெறுவதற்காக யாழ். பிறப்பு - இறப்பு பதிவாளர் அலுவலகத்துக்கு விண்ணப்பிப்பவர்கள் கடித உறையின் மேல் மூலையில் ''கடவுச் சீட்டு பெறுவதற்கு'' எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக பதிவாளர் திரு. அ. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாஸ்போர்ட்டுக்கான விண்ணப்பங்களுடன் இணைக்கப்படும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களில் யாழ். அரச அதிபர், அல்லது மேலதிக அரச அதிபர் மேலொப்பமிட வேண்டும்.

யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்படும் பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்களை கொழும்பு குடிவரவு, குடி அகல்வுத்திணைக்களம் ஏற்க மறுத்ததை தொடர்ந்து, யாழ். அரச அதிபர் அண்மையில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள உயரதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே இப் புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (த-100)

## ஓய்வு பெற்ற பொலீஸாருக்கு காவல்துறையினர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

சிறீலங்கா பொலீஸில் சேவையாற்றி ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்கள் அனைவரையும் இன்று 14 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு தமிழீழ காவல்துறை அலுவலகததிற்கு தவறாது சமுகம் தரும்படி காவல்துறையின் பொறுப்பாளர் கோரி உள்ளார்.. [இ]

## ராஜீவின் பிய்ந்த உடல் ஒன்றாக இணைக்கப்பட்டது

சென்னை, ஜூலை 14

ராஜீவ்காந்திக்கு மிக அருகில் வெடித்த குண்டு அவர் உடலை மிகக் கோரமாக சிதைத்து விட்டது. அவரது முகத்தில் வலது புறம், நாசியின் ஒரு பகுதி, வலது காது ஆகியவை தான் மிஞ்சின.

கொலையுண்ட ராஜீவின் உடல் இருந்த நிலை பற்றி சென்னைப் பத்திரிகைகள் இவ்வாறு விவரித்துள்ளன.

சக்தி வாய்ந்த குண்டு வெடித்தபோது அது அவரைத் தரையில் அறைந்தது. அவரது கபாலம் பிளந்து மூளை எகிறி அவரது பாதுகாப்பு அதிகாரி வி. கே. குப்தாவின் காலில் சரிந்து கிடந்தது. குப்தாவும் குண்டு வெடிப்பில் இறந்தார்.

ராஜீவின் கல்லீரலும், சிறுநீரகங்களும், குடல்களும் கூட தாக்குதல்களால் சிதறின. அவரது உடலை அடையாளம் காண அவரது நண்பர்களுக்கே சிறிது நேரம் பிடித்தது.

பின்பு ''ஸ்ரெச்சர்'' ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு, உடலின் துண்டுகள் அதில் எடுத்து வைக்கப்பட்டன. மூளையின் ஒரு பகுதி தலைக்கு வெளியே தொங்கிக்கொண்டிருந்தது.

பின்பு சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவமனையில் உடல் இணைக்கப்பட்டே ஒரு வடிவம் பெற்றது—என்றும் செய்திகள் தெரிவித்தன. [உ-த]

## புகழுடல்கள் அஞ்சலிக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 14

ஆனையிறவில் களப்பலியானபோராளிகளில் 6 பேரின் புகழுடல்கள் நேற்று கல்வியங்காடு சந்தையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

ஏராளமான மக்கள் அஞ்சலி செலுத்தினர். புகழுடல்கள் மாலை கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன. (ஒ-15)

## ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

பூநகரி நல்லூர் பகுதியில் நேற்று முன்தினம் ஹெலி தாக்குதல் நடத்தியதில் ஒருவர் தலையில் காயமடைந்தார்.

அவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-3)

## ஹெலி தாக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 14

தென்மராட்சி மற்றும் வலி வடக்கில் நேற்று ஹெலிகள் தாக்குதல்களை நடத்தின.

சாவகச்சேரி, தெல்லிப்பளை, கோப்பாய் பாலம், புத்தூர் பகுதிகளில் வாகனங்களை நோக்கியும், சைக்கிள்களில் சென்றோரை நோக்கியும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. [ஒ-3]

## ராவ் - டிக்ஸிற் சந்திப்பு

புதுடில்லி, ஜூலை 14

பாகிஸ்தானில் உள்ள இந்தியத் தூதர் ஜே.என்.டிக்ஸிற் புதுடில்லியில் நேற்று பிரதமர் பி. வி. நரசிம்மராவைச் சந்தித்துப் பேச்சுககள் நடத்தினார்.

வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங், வெளியுறவு இணை அமைச்சர் எட்வர்ட் பெலரோன் ஆகியோரையும் திரு. டிக்ஸிற் சந்தித்துப் பேசினார்.

திரு. நரசிம்மராவ் பிரதமரான பின்னர் திரு. டிக்ஸிற் புதுடில்லிக்கு வந்திருப்பது இதுவே முதற் தடவை என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## விமான..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலத்தை ஸ்ரீலங்காப் படைகள் கணிசமான அளவு இழந்திருப்பது. ஆனையிறவு முகாமைக் காப்பாற்றும் அரச படைகளின் முயற்சியில் பெரும் பின்னடைவு ஏற்படுத்தியிருக்கிறது.

அத்துடன்-

புலிகள் முகாமைச் சூழவுள்ள பகுதியை நெருங்கி சென்று திரள்வதையும், முகாமைச் சூழ்ந்த பகுதிகளில் தாராளமாக நடமாடி தாக்குதல் தயார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் விமானப் படையினால் தடுக்கஇயலாது இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளின் விமான எதிர்ப்புத் தாக்குதல் பல மடைந்திருப்பதற்கு அவர்கள் புதுவகையான ஆயுதங்கள் எதையும் பாவிப்பது காரணமா என்பதை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை. (உ)

## பெயர்களை மாற்ற முடிவு

சென்னை, ஜூலை 14

தி. மு. க. அரசு மாவட்டங்களுக்கு சூட்டிய பெயர்கள் சிலவற்றை மாற்றப் போவதாக அ. தி. மு. க. அரசு நேற்று அறிவித்தது.

இது பற்றிய விவரங்களை முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று சட்டசபையில் வெளியிட்டார். [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆறு வாரங்கள் நிரம்பிய அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல. 222, லக்சுமி வாசா [வட்டுக் கோட்டை, இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்] தெல்லிப்பளை வீதி, சித்தன் கேணி. (17513)

அல்சேஷன் 2 மாத நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பூச்சி நீக்கப்பட்டவை. தொடர்பு சி. ராஜேந்திரம். [பஜனை மாமா] C/O நியூ பார்மசி, 5ஆம் கட்டை, ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய். (4199)

அல்சேஷன் 40 நாள் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பூச்சி நீக்கியது. தொடர்பு: பொ. தில்லைராசா, 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. [Organ Classes எதிர் வீடு] [17445]

### மணமகள் தேவை

38 வயது நிரம்பிய அதிபராக் கடமையாற்றும் கிறிஸ்தவ மணமகனுக்கு தொழில் செய்யும் 34 வயதிற்குட்பட்ட, மதப்பற்றும் உள்ள மணமகள் தேவை. முழு அளவிலான வர்ணப் புகைப்படத்துடனும், சாதகக் குறிப்புடனும் விண்ணப்பிக்கவும். தொடர்பு: வி. இல. 330, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (17411)

### அம்பாள் திருமண சேவை

27 வயது Engineer க்கும 30 வயது I.C.M A. Accountant க்கும் Doctor I.C.M.A. Part 2, 3& 4 படித்த 4 வயது வித்தியாசமுள்ள மணப்பெண்கள் தேவை. சின்னச்சாமிக்குருக்கள், சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (17272)

### தவறிவிட்டது

கதிரித்தம்பி செல்வராசா, செல்வராசா புவனேஸ்வரி, செல்வராசா குமுதினி என்பவர்களின் அடையாளஅட்டைகளும் வேறு சில ஆவணங்களும் 7 - 7 - 1991 இல் கேரதீவு இறங்குதுறையில் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (17509)

### வாடகைக்கு

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் பாதுகாப்பான இடத்தில் கடை வாடகைக்கு உண்டு. வியாபார முதலீடு செய்து வியாபாரம் செய்ய ஆற்றல் உள்ளவர்கள் பங்காளராக சேர்ந்து வியாபாரம் செய்ய விரும்பினால் விண்ணப்பிக்கவும். இல. 331, மே/பா உதயன் யாழ்ப்பாணம். [17432]

### ஜோதிடம்

வெளிவந்து விட்டது [ஆகஸ்ட்] வியாழமாற்றம் எங்கும் விற்பனையாகின்றது. விலை ரூ. 6/- நூலாசிரியர் [தத்துவ ஞானம், ஜோதிட விஞ்ஞானம்] Prof. சத்தியதாஸன் ஞானம் ஸ்ரோர்ஸ், சித்தன்கேணி. (17508)

## கொடிகாமத்தில் புகழுடல்கள் தகனம்

ஆனையிறவில் வீரமரணம் அடைந்த எண்மரின் புகழுடல்கள் நேற்று கொடிகாமத்தில் உள்ள தென்மராட்சி மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன.

இந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக கொடிகாமம் பகுதியில் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. (இ-75)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம்: 13 — 08 — 1969



வீர மரணம்: 14 — 06 — 1991

### இளம்புலி ஜீவமலர்
### (ஸ்ரீ துளசி கணேசசுந்தரன்)

இன்னமும் வருவாய் – என
மெல்லிருட் காலை ஏங்கும்...
முற்றத்து மல்லிகை - உனக்காய்
பூத்துளது - நீ
முழுகிக் களிக்கவென
கிணற்றடி காத்துளது
இன்னமும் வருவாய் - என
மெல்லிருட் காலை ஏங்கும்.

இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

திரு. திருமதி சுப. கணேசசுந்தரன்,
குடும்பத்தினர்.

36 A, அரச வீதி,
நல்லூர். (17518)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 28 – 4 – 1963

உதிர்வு: 14 – 7 – 1989

### திருமதி கத்தறீன் அழகராஜா
### [கலா]

அன்பின் சின்னமாய், குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்து எம்மை ஆறாத் துயரத்தில் தவிக்கவிட்டுப் பிரிந்த எம் அன்புச் செல்வமே ஆண்டு பல மறைந்தாலும் உம் நினைவு எம் நெஞ்சை விட்டகலாது அம்மா!

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உமது துயரால் வாடும்;
அன்புக் கணவன், மகள்.
உறவினர்கள்.

நாவற்குழி கிழக்கு,
கைதடி. [17512]

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் வேலும்மயிலும்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியில் வசித்தவரும், பிரபல வியாபாரியுமாகிய இராமலிங்கம் வேலும்மயிலும் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கவேலாயுதம், கதிரவேலு, மகேஸ்வரி, வெற்றிவேலு, வடிவேலு, இரத்தினவேலு, நவரத்தினவேலு ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 14-7-91 இல. 16, கலட்டி அம்மன் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
16, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
வடிவேலு
(17275)

இப்பத்திரிகை [illegible] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14-07-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கோப்பாய் பயிற்சி ஆசிரியர் சேவை ஒன்றியம் விடுக்கும்

## அவசர அழைப்பு

மேற்படி சேவை ஒன்றியத்தின் செயற் திட்டங்களில் இணைந்து சேவையாற்றும் உறுப்பினர்களும், ஏனைய சகல பயிற்சி ஆசிரியர்களும்

**15-07-1991 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு**

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நிகழவிருக்கும்

“ இன்றைய சூழ்நிலையில் நாம் ஆற்றவேண்டிய சேவைகள்”

பற்றிக் கலந்துரையாட ஒன்றுகூடுமாறு அவசரமாக அழைக்கப்படுகின்றனர். (17520)

## மரண அறிவித்தல்கள்

### அ. ச. மகாதேவா

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும், யாழ் நகரை வதிவிடமாகவும் கொண்ட திருவாளர் அருணாசலம் சண்முகம் மகாதேவா அவர்கள் 13-07-91 சனிக்கிழமை மாலை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் அ. ச. மகாதேவா ஆபரண மாளிகையின் முன்னாள் உரிமையாளரும், யாழ். றோட்டரிக் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினருமாவார்.

இவர் திருமதி சுந்தரம்மாவின் அன்புக் கணவரும், திரு. ஜெயதேவன் [சண்முகம் ரேட்ஸ், பிரதானவீதி யாழ்ப்பாணம்], செல்வி கௌரியின் அருமைத் தந்தையாரும், திருமதி ஞானேஸ்வரி ஜெயதேவனின் மாமனாரும், அருட்குமரன், அஜந்தன் ஆகியோரின் அன்புப் பேரனாரும், திருமதிகள் சரஸ்வதி பரமு, சாரதா சம்பந்தன், காலஞ்சென்றவர்களான திரு. தர்மா (விமானப் பொறியியலாளர்), மகானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி சிவனேஸ்வரி மகானந்தன், டாக்டர் N. T. சம்பந்தன், காலஞ்சென்றவர்களான திரு. க. பரமு, புனிதவதி தர்மா ஜெயசீலன் ஆகியோரினதும் திருமதிகள் புஸ்பவதி சர்வானந்தா, கதிரவேலு அமராவதி (மலேசியா), ஞானக்கிளி நவரத்தினம் (U. K) ஆகியோரினதும் அன்பு மைத்துனரும், திரு. ச. புவனசுந்தரம் (பிரசித்த நொத்தாரிசு – திருநெல்வேலி) அவர்களின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15 - 7 - 91 திங்கட்கிழமை மு, ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

105, 4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தகவல்:
திரு. ம. ஜெயதேவன்
(மகன்)
[17277]

### சுந்தரம்பிள்ளை ஆனந்தராசா
### (கண்ணியம்)

இருபாலை கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை ஆனந்தராசா கண்ணியம் முன்னாள் கண்ணியம் பத்திரிகையாசிரியர், கண்ணியம் பேக்கரி, டெல்க்கா பேக் கவுஸ் உரிமையாளர் 13-7-1991 காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை, செல்லம்மா தம்பதிகளின அன்பு மகனும் சிறிவதனாவின் அன்புக் கணவரும் றஜீந்தன், தர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தையா, ஞானமணி தம்பதிகளின் மருமகனும் ஜெயவதனா (ஜேர்மனி), தனேஸ்வரி, ஜெகதீசன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் சுந்தரலிங்கம் (ஜேர்மனி), சண்முகராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுதாசாந்தன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14 - 7 - 91 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இருபாலை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டெல்கா பேக் கவுஸ்,
கொய்யாத்தோட்டம், இருபாலை
கந்தையா
(17274)

### செல்வி ஜெயராணி யோசெப்

குருநகர் கொண்டடி வீதியைச் சேர்ந்த செல்வி ஜெயராணி யோசெப் 13-7-1991இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கபிரியேல் யோசெப் - திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற லூர்துமலர் யேசுதாஸன், திருமதி ராஜேஸ் சிவராசா (யாழ். திருக்குடும்பக் கன்னியர் ஆங்கில பாடசாலை), திருமதி மேசி கிறிஸ்தோப்பர் (யாழ். புனிதர் சாள்ஸ் ம, வி.), திருமதி வின்சன் கொன்சலாற்ரா (கனடா), திரு. அன்ரன் [லண்டன்], திரு. பத்மராஜ் [லண்டன்] ஆகியோரின் அருமைச் சகோதரியும், திரு, அ. யேசுதாசன் (புறூனோ), திரு. அ. கிறிஸ்தோப்பர் (யாழ். புனித யோசெப் வித்தியாலயம், கொழும்புத்துறை], திரு. சி, வின்சன் [கனடா], திருமதி ராதா அன்ரன் (லண்டன்) திருமதி உமாதேவி பத்மராஜ் [லண்டன்], காலஞ்சென்ற பொ. சிவராசா [முன்னாள் யாழ். பரியோவான் கல்லூரி ஆசிரியர்] ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக 14-07-91 இன்று காலை 9-30மணிக்கு 26 கொண்டடி வீதி குருநகர் இல்லத்தில் இருந்து யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

26, கொண்டடி வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
தகவல்:
திருமதி திரேசம்மா
[தாய்]
[சி/0239]